# புருஷகாரதத்தவம்

மதுரகவிதாஸன் ஸ்ரீ உ.வே. திருப்புல்லாணி ஸுந்தரராஜ ஸ்வாமி

பிராட்டிக்குப் புருஷகாரத்வமானது அஸாதாரண தர்மமாகும் (அவளுக்கேயுரிய தர்மமாகும்). புருஷகாரம் என்றால் அபுருஷனைப் புருஷனாக ஆக்குபவள் என்றர்த்தம். புருஷன் என்றால் நிறையக் கொடுப்பவன் என்று பொருள். குற்றங்களால் நிறைந்தவனான சேதநன் பகவானை வந்து கிட்டும்போது இவனுடைய குற்றங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு இவனைச் சீறி இவனுக்குப் பலங்கொடுக்காதவனாக நிற்கிறான் அவன். எனவே அபுருஷனாக நிற்கிறான். அப்பொழுது பிராட்டி அவனுக்கு தயை, வாத்ஸல்யம் முதலிய குணங்கள் இருப்பதைக் காட்டிக் கொடுத்து, 'உலகில் யார் தான் தவறிழைக்கவில்லை?' முதலான வார்த்தைகளால் அவனுடைய சீற்றத்தையாற்றி, இவனிடத்தில் தேவரீர் வாத்ஸல்யாதிகுணங்களைக் காட்ட வேணும் என்று ப்ரார்த்தித்து இவன் விரும்பிய பலத்தை அவனே மனமுவந்து கொடுக்கும்படி செய்கிறாள். இப்படி பகவானை இவள் தன் வழி வரச்செய்து நிறையக் கெடுப்பவனாக ஆக்குகிறளாகையால் இவள் புருஷகாரதத்தவமாவாள்.

இது தன்னை ''மத்ப்ராப்திம் ப்ரதிஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத: ।
லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: ।
மமாபி ச மதம் ஹ்யேதந் நாந்யதா லக்ஷணம் பவேத் ॥

என்று பாஞ்சராத்ரஶாஸ்த்ரத்திலே பகவானே அருளிச் செய்துள்ளான். இதன் பொருள் 'ஸம்ஸாரத்தில் கீழே விழுந்து கிடக்கும் சேதநர்கள் என்னையடைவதற்குப் புருஷகாரமாக (சேர்த்து வைக்கும் தத்வமாக) லக்ஷ்மியானவள் இருக்கிறாள் என்று பரமர்ஷிகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறாள். எனக்கும் அது ஸம்மதமேயாகும். புருஷகாரத்வமாகிற தர்மம் தவிர அவளுக்கு வேறு லக்ஷணம் (அடையாளம்) கிடையாது'-என்பது.

மற்றைப் பிராட்டிமார்க்கும் ஸூரிகள் முதலான ததீயர்க்கும் இவள் ஸம்பந்தமடியாக வருகிற புருஷகாரத்வமிறேயுள்ளது; இவளைப்போலே ஸ்வதஸ்ஸித்தமன்றே.

இச்சேதனனுக்கு இருவரோடும் ஸம்பந்தமுண்டாயிருக்க ஈஶ்வரஸமாஶ்ரயணத்துக்கிவள் புருஷகாரமாக வேண்டுகிறதென்னென்னில் மாத்ருத்வப்ரயுக்தமான வாத்ஸல்யாதிரேகத்தாலும் அவனைப் போலவே காடிந்யமார்தவங்கள் கலந்திருக்கையன்றிக்கே, கேவல மார்தவமேயாய்,

பிறர் கண்குழிவு காணமாட்டாத ப்ரக்ருதியாகையாலும், விமுகரையும் அபிமுகராக்குகைக்கு க்ருஷி பண்ணுமவளாகையாலும் குற்றவாளர்க்குங் கூசாமல் வந்து காலிலே விழலாம்படி யிருப்பாளாய், பும்ஸத்வப்ரயுக்தமான காடிந்யத்தோடே பித்ருத்வப்ரயுக்தமான ஹிதபரதையை யுமுடையனாய் குற்றங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு க்ரூரதண்டங்களைப் பண்ணுகையாலே, குற்றவாளர்க்கு முன் செல்லக் குடல் கரிக்கும்படியிருக்கும்மீஶ்வரனை உசிதோபாயங்களாலே குற்றங்களையடைய மறப்பித்துக் கூட்டிவிடுமவளுமாயிருக்கையாலே அபராதமே வடிவான விச்சேதநன் அவனையாஶ்ரயிக்குமளவில் இவள் புருஷகாரமாக வேணும். ஆகையிறே அவனையுபாயமாகவரிக்க விழிகிறவளவில், இவளை புருஷகாரமாக முன்னிடுகிறது.

'புருஷகாரமாம்போது க்ருபையும் பாரதந்தர்யமும்
அநந்யார்ஹத்வமும் வேணும்' (ஸ்ரீவசநபூஷணம் 7)

(புருஷகாரமாம்போது) என்றது புருஷகாரமாமிடத்தில் என்றபடி. க்ருபையாவது - பரது: காஸஹிஷ்ணுத்வம். பாரதந்த்ர்யமாவது - பராதீநத்வம் அநந்யார்ஹத்வமாவது-தத்வ்யதிரிக்த விஷயாநர்- ஹாத்வம். இவை புருஷகாரத்துக்கு அவஶ்யாபேக்ஷிதமானபடியென்னென்னில், சேதநர் ஸம்ஸாரத்தில் படுகிற து:கங்கண்டு பொறுக்கமாட்டாமல் ஈஶ்வரனோடே இவர்களைச் சேர்க்கைக்குடலான யத்நம் பண்ணுகைக்கு க்ருபை வேணும்; ஸ்வதந்த்ரனை வஶீகரிக்கும்போது அநுவர்த்தநத்தாலே வஶீகரிக்க வேண்டுகையாலே பாரதந்த்ர்யம் வேணும்; நம்மையொழிந்ததொரு விஷயத்துக் கர்ஹமன்றியே நமக்கேயதிஶய-கரமாயிருக்கும் வஸ்துவாகையாலே நங்கார்யமன்றோ சொல்லுகிறது என்று சொன்னபடி-யவன் செய்கைக்குறுப்பாகையாலே அநந்யார்ஹத்வம் வேணும். ஆகையாலிவை மூன்றும் புருஷகாரத்துக்கவஶ்யாபேக்ஷிதமிறே. ஈஶ்வரக்ருபையிற்காட்டிலிவன் க்ருபைக்கு விஶேஷமென்னென்னில், ஈஶ்வரனாவான் நிரங்குஶஸ்வதந்த்ரனாய், நிக்ரஹாநுக்ரஹங் களிரண்டுக்கும் கடவனாய், சேதநகர்மங்களை நிறுத்தறுத்துத்தீத்துமவனாகையாலே (விடாமல் அனுபவிக்கச் செய்பவனாகையாலே) அவனுடைய க்ருபை ஸ்வாதந்த்ர்யத்தாலே யமுக்குண்டு கிடந்து ஓரோ தஶைகளிலே தலையெடுக்கக் கடவதாயிருக்கும். இவள் அநுக்ரஹைகஶீலை யாகையாலே யிவளுடைய க்ருபைக்கு வேறொன்றால் ஓர் அபிபவம் (அமுக்குண்ணுதல்) இல்லாமையாலே எப்போதுமொருபடிப்பட்டிருக்கும். ஆகையால் இவளுடைய க்ருபை கரையழிந்திருக்கும். இப்படியிருக்கையாலேயிறே இவளையாஶ்ரயிப்பார்க்கு வேறொரு புருஷகாரம் (கடகதத்த்வம்=சேர்த்து வைக்கும் தத்த்வம்) தேடவேண்டாதொழிகிறது.

ஈஶ்வரவிஷயத்தில் இவளுடைய பாரதந்த்ர்யமும் அநந்யாஹத்வமும் ஆகிறயிவை ஸ்வரூபப்ரயுக்தமான மாத்ரமன்றிக்கே பத்நீத்வ-ப்ரயுக்தமாயும் ஸ்வரூபநிருபகத்வஸித்தமான அநந்யத்வ ப்ரயுக்தமாயுமிருக்கும். இப்படியிருக்கையாலேயிறே அல்லாதார்க்கடைய மிதுநஶேஷத்வமும், இவளொருத்திக்கும் ததேகஶேஷத்வமுமாய்த்து.

இந்த அவ்யவதாநேந வுண்டான ஸம்பந்தத்தாலேயிறே, இவளுக்கு ஈஶ்வரனை வஶீகரிக்குமளவில் புருஷகாரம் வேண்டாதொழிகிறது.

இந்த க்ருபை, பாரதந்தர்யம், அநந்யார்ஹத்வம், என்ற மூன்று குணங்களையும் பிராட்டி தன்னுடைய மூன்று பிரிவுகளால் வெளிப்படுத்தினாள்.

'பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக, நடுவிற் பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக, அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக' (ஸ்ரீவசநபூஷணம் 8)

ஆக ஸீதாவதாரத்தில் இவளுக்கு ஏற்பட்ட விஶ்லேஷத்ரயத்துக்கும் ஹேது, இக்குணங் களை இப்படி வெளியிடுகையாய்த்து. இங்ஙனன்றாகில் அநபாயிநியாய் அகர்மவஶ்யையா யிருக்கிற விவளுக்கு, கர்மவஶ்யரைப் போலே, இப்படிப் பிரிவு வருகைக்கு யோக்யதை யில்லையிறே. தன்னுடைய புருஷகாரத்வோபயோகியான குணங்களையும் புருஷகாரத்வத் தையும் ப்ரகாஶிப்பிக்கைக்காக வந்த வவதாரமிறேயிது. இப்படி சேதநர்பக்கல் அநுக்ரஹத்துக் குடலான க்ருபையையும் ஈஶ்வரன் பக்கலனுகி வஶீகரிக்கைக்குடலான பாரதந்த்யர்யாதி களையும் தானே வெளியிட்டது, ஶாஸ்தரங்களில் கேட்கிற மாத்ரமன்றிக்கே அநுஷ்டாநபர்யந்த மாகக் காண்கையாலே தன்னை புருஷகாரமாகப்பற்றுவார்க்கு ருசிவிஶ்வாஸங்களுறைக்கைக் குறுப்பாக. ஏவம்பூதகுணவிஶிஷ்டையான விவளுடைய புருஷகாரத்வம் தோற்றுவிதெங்கே யென்றால்-

'ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களிரண்டிலும் புருஷகாரத்வம் தோற்றும்' (ஸ்ரீவசநபூஷணம் 9) என்றருளிச்செய்கிறார் பிள்ளையுலகாரியன். புருஷகாரத்வமாவது-கடகத்வம்-சேர்த்து வைக்கும் தன்மை; அது இவளுக்கு அவனோடு கூடியிருக்குந் தஶையிலும் நீங்கியிருக்குந் தஶையிலும் ப்ரகாஶிக்கு மென்கை.

இவ்வுபயதஶையிலும் இவள் புருஷீகரிக்கும் ப்ரகரமென்னென்ன வருளிச்செய்கிறார். -

'ஸம்ஶ்லேஷதஶையில் ஈஶ்வரனைத்திருத்தும்,

விஶ்லேஷதஶையில் சேதநனைத்திருத்தும். (ஸ்ரீவசநபூஷணம் 10)

என்று ஈஶ்வரனைத் திருத்துகையாவது-அபராதத்தையே பார்த்து 'ந க்ஷமாமி' (அபராதத்தைப் பொறுக்கமாட்டேன்) என்றிருக்குமிருப்பைக் குலைத்து அங்கீகாரோந்முகனாக் குகை; சேதநனைத் திருத்துகையாவது-அக்ருத்யகரணாதி ஶீலனாய் பகவத்விமுகனாய்த் திரிகிற ஆகாரத்தைக் குலைத்து ஆஶ்ரயணோந்முகனாக்குகை.

இருவரையும் திருத்துவதெவ்வழியாலே யென்னுமாகாங்க்ஷையிலேயருளிச் செய்கிறார்-
'இருவரையும் திருத்துவது உபதேஶத்தாலே' (ஸ்ரீவசநபூஷணம் 11) என்று

### புருஷகாரதத்த்வம்

பிராட்டி ஈஶ்வரனுக்குப் பண்ணுமுபதேஶம்-'இச்சேதநனுடைய வபராரதங்களைக் கணக்கிட்டு நீரிப்படி தள்ளிக் கதவடைத்தால் இவனுக்குப் போக்கு வேறொரு புகலுண்டோ, உமக்குமிவனுக்குமுண்டான பந்தவிஶேஷத்தைப் பார்த்தால் 'உறவேல் நமக்கிங் கொழிக்க

வொழியாது' (திருப்பாவை 28) என்கிறபடியே குடநீர் வழித்தாலுடபோகாத தொன்றன்றோ, ஸ்வம்மானவிவனை லபிக்கை ஸ்வாமியான வும்முடைய பேறாயன்றோ யிருப்பது, எதிர்சூழல் புக்குத் திரிகிற (எதிர்ப்பிறவி பிறந்து திரிகிற) வுமக்கு நான் சொல்ல வேணுமோ, ரக்ஷணஸாபேக்ஷனாய் வந்த விவனை ரக்ஷியாதபோது உம்முடைய ஸர்வரக்ஷகத்வம் விகலமாகாதோ? ஆனபின்பு இவனை ரக்ஷித்தருளீர்' என்பது.

இந்த உபதேஶத்தாலே ஈஶ்வரனைத் திருத்துகிறாள்

இனி அவள் சேதநனுக்குப் பண்ணும் உபதேஶம் - 'உன்னபராதத்தின் கநத்தைப் பார்த்தால் உனக்கோரிடத்தில் காலூன்ற விடமில்லை. ஈஶ்வரனாவான் நிரங்குஶஸ்வதந்த்ரனாகையாலே அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு உசித தண்டங்களைப் பண்ணுவன் இவ்வநர்த்தத்தைத் தப்ப வேண்டில் அவன் திருவடிகளிலே தலைசாய்க்கையொழிய வேறொரு வழியில்லை, அபராத பரிபூர்ணனான வென்னை அவனங்கீகரிக்குமோ தண்டியானோவென்று அஞ்சவேண்டா, ஆபிமுக்யமாத்திரத்திலே அகிலாபராதங்களையும் பொறுக்கைக்கும் போக்யமாகிக் கொள்ளுகைக்கும் ஈடான குணங்களாலே புஷ்கலனென்று லோகப்ரஸித்தனா யிருப்பானொருவன், ஆனபின்பு நீ ஸுகமேயிருக்க வேணுமாகில் அவனை ஆஶ்ரயிக்கப்பார்' - என்பது. இந்த உபதேஶத்தாலே சேதநனைத் திருத்துகிறாள். அப்படி எங்கே கண்டோமென்னில் பாபிஷ்டனாய் வழிகெட நடந்து திரிகிற ராவணனைக் குறிதது 'நீ ஜீவிக்க வேணுமென்று இச்சித்தாயாகிப் பெருமாளோடு உனக்கு உறவு உண்டாக வேணும்' என்று அச்சமுறுத்தி உபதேஶித்தாளிறே.

இவ்வுபதேஶத்தாயிரண்டு தலையிலும் பலிக்குமதேதென்ன வருளிச்செய்கிறார்-

'உபதேஶத்தாலே யிருவருடையவும்

கர்மபாரதந்த்ர்யம் குலையும்' (ஸ்ரீவசநபூஷணம் 12)

அதாவது-இப்படி இரண்டு தலைக்கும் தத்ததநுகுணமாக விவள் பண்ணுமுபதேஶத்தாலே புண்யபாபங்களின் வஶத்திலே இழுப்புண்டு பகவத்விமுகனாய்த் திரிகையாகிற சேதனனுடைய கர்மபாரதந்த்ர்யமும், இவன் பண்ணின கர்மத்தை ப்ரதாநமாக்கி அதுக்கீடாகவே செய்வனித்தனையென்று இவனுடைய ரக்ஷணத்தில் விமுகனாயிருக்கையாகிற ஈஶ்வரனுடைய கர்மபாரதந்த்ர்யமும் நிவ்ருத்தமாமென்கை.

இவ்வுபதேஶத்தால் இவர்கள் மீளாதபோது இவள் செய்வதென்னென்ன வருளிச் செய்கிறார் -

'உபதேஶத்தாலே மீளாதபோத சேதநனையருளாலே திருத்தும்; ஈஶ்வரனையழகாலே திருத்தும் (ஸ்ரீவசநபூஷணம் 13)

ஆக 'புருஷகாரமாம்போது' (ஸ்ரீவசநபூஷணம்) என்று தொடங்கி பதிமூன்றாவதான இந்தச் சூர்ணிகை முடியவுள்ள ஏழு சூர்ணிகைகளால் புருஷகாரத்வோபயோகிகளான

குணவிஶேஷங்களையும் அவை தன்னைத்தானே வெளியிட்டபடியையும் ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களிரண்டிலும் புருஷீகரிக்கையையும் தத்ப்ரகாரவிஶஷங்களையும் சொல்லிற்றாய்த்து.